செய்தி வெளியீடு–84 நாள்– 27.1.2010

## விஜய நகர மாமன்னர் கிருஷ்ண தேவராயர் முடிசூடிய 500ஆம் ஆண்டு விழா! முதலமைச்சர் கலைஞர் வாழ்த்துச் செய்தி!

## கர்நாடக முதலமைச்சருக்கு அனுப்பினார்

விஜய நகரப் பேரரசின் மாமன்னர் கிருஷ்ண தேவராயருக்கு முடிசூட்டப்பட்ட 500வது ஆண்டு விழா, கர்நாடக மாநிலம் பெல்லாரி மாவட்டம் ஹம்பியில் 29.1.2010 அன்று நடைபெறுவதையொட்டி, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கர்நாடக மாநில முதலமைச்சர் திரு.பி.எஸ்.எடியூரப்பா அவர்களுக்கு இன்று (27.1.2010) வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

"விஜயநகரப் பேரரசின் 18வது மன்னராக முடிசூட்டப்பட்டவர் கிருஷ்ண தேவராயர். அவர் போர்ச்சுகீசியர்கள், அராபியர்கள், பாரசீகர்கள், சீன நாட்டினர் ஆகிய அயல்நாட்டினரை மகிழ்ச்சியுடன் வரவேற்று தமது நாட்டின் வாணிகத்தைப் பெருக்கினார். அவர் தமது அரசின் நிர்வாகத்தை மிகச் சிறந்த அறநெறிகளுடன் நடத்தியுள்ளார்.

கிருஷ்ண தேவராயர் தெலுங்கிலும், வடமொழியிலும் மிகுந்த புலமை வாய்ந்தவர். அவர் தெலுங்கில் படைத்துள்ள "அமுக்தமால்யதா" என்னும் நூலில் திருவில்லிபுத்தூர் நங்கை ஆண்டாளின் பெருமைகளைப் புகழ்ந்து எழுதியுள்ளார். அவரது அரசவையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய பல மொழிகளிலும் சிறந்த அறிஞர்களை அமர்த்தி, ஆதரவளித்தார்.

ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகம் போன்ற பல்வேறு கலைகளுக்கும் ஊக்கமளித்து அவற்றை வளர்த்துள்ளார். அவர் ஒரு வைணவர் என்ற போதிலும், சைவம், சமணம் ஆகிய சமயங்களையும் வேறுபாடு கருதாது ஆதரித்துள்ளார். இத்தகைய பெருமைகள் மிகுந்த கிருஷ்ண தேவராயர் முடி சூடியதன் 500ஆம் ஆண்டு விழாவைக் கர்நாடக மாநில முதலமைச்சர் திரு.பி.எஸ். எடியூரப்பா அவர்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வேளையில்,

அவர் மிகுந்த முயற்சிகள் மேற்கொண்டு பெங்களூரு மாநகரில் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்திட என்னை அன்புடன் அழைத்ததையும், அந்த அழைப்பினை ஏற்று நான் அங்கு சென்று; நட்புணர்வுடனும், சகோதர பாசத்துடனும் கூடிய பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மற்றும் கன்னட உடன்பிறப்புகள் முன்னிலையில் 9.8.2009 அன்று நடைபெற்ற மாபெரும் விழாவில் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்ததையும் மகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறேன். மேலும், சென்னையில் 13.8.2009 அன்று, பல்லாயிரக்கணக்கான கன்னட மக்களும், தமிழர்களும் இரு மாநிலங்களுக்கிடையே உறவு மேலும் வலுப்படும் வகையில் கூடியிருந்த நிலையில் கர்நாடக முதலமைச்சர் அன்புச் சகோதரர் திரு.பி.எஸ். எடியூரப்பா அவர்கள் கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் அவர்களின் சிலையைச் திறந்து வைத்ததையும் இன்று எண்ணி மகிழ்கிறேன்.

இந்த மகிழ்ச்சியோடு கர்நாடக அரசு அங்கு ஏற்பாடு செய்துள்ள, மாமன்னர் கிருஷ்ண தேவராயர் முடிசூடிய 500ஆம் ஆண்டு விழா வெற்றிகரமாகவும், எழுச்சியோடும் நிகழ்ந்திட தமிழக மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் உளமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்''

–என்று கூறியுள்ளார்.

****

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.